" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2008ம் ஆண்டு மே திங்கள் 28-ம் நாள் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு**

அறிஞர் அண்ணா மாளிகை
பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் :** ***" ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்***
***எழுமையும் ஏமாப் புடைத்து "***

**பொருள் :** ஒரு பிறவில் ஒருவன் ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கி வாழக் கற்றுக் கொண்டால் அந்த அடக்கம் அவன் எடுக்கும் ஏழு பிறவிக்கும் பாதுகாவலாக வந்து அமையும்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

## 1) சி.டபிள்யு.2 / 39182 / 2006

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-1 விதி 19(2)ன் படி 20.5.2008ம் தேதி நடைபெற்ற கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண். 385**
**பதிவு செய்யப்பட்டது,**

## 2) மநி 1 / 8801/ 07

மதுரை மாநகராட்சியின் அயற்பணியின்கீழ் பணிபுரிந்து திரு.சு.ஜோதிமுருகன், தணிக்கை ஆய்வாளரின் அயற்பணி காலத்தினை 3.5.2008 முதல் 2.5.2009 வரை ஓராண்டு காலத்திற்கு நீடிப்பு செய்து வரப்பெற்றுள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை செயல்முறை ஆணை எண்.ப&நி.1(3)/ 2165/2008 -4, நாள் : 15.4.2008ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண். 386**
**பதிவு செய்யப்பட்டது**

## 3) B1 / 9844 / 08

மதுரை மாநகராட்சியில் பணிபுரிந்து வருவபவர்களும், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுமான அலுவலர்களுக்கு அரசாணை எண்.112, நாள் : **24.03.2008–**ன்படி அரசாணை வெளியிடப்பட்ட தேதி முதல் குடும்ப ஓய்வூதியத்தில் 50% டி.பி.மற்றும் முழு ஓய்வூதியத்திற்குண்டான அகவிலைப்படியும் சேர்த்து வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : 50% டி.பி. மற்றும் முழு ஓய்வூதியத்திற்குரிய அகவிலைப்படியும், அரசாணை வெளியிடப்பட்ட 24.03.2008 முதல் வழங்கப்பட வேண்டும்.

**மாமன்ற தீர்மானம் எண். 387**
**பதிவு செய்யப்பட்டது**

## 4) B30 / 24975 / 07

மதுரை மாநகராட்சி வைகை குடிநீர் திட்டம், பண்ணைப்பட்டியில் அமைந்துள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வைகை அணையிலிருந்து பெறப்படும் சுத்தகரிக்கப்படாத நீரினை சுத்திகரித்து குடிநீரை குளோரினேசன் செய்து மதுரை மாநகராட்சி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கவும், மேலும், அரசரடி நீரேற்று நிலையம், மணலூர் நீரேற்று நிலையம், கோச்சடை நீரேற்று நிலையம் மற்றும் மாநகராட்சி நீச்சல் குளம் ஆகியவற்றிற்கும் சேர்த்து மொத்தம் 132 மெட்ரிக்டன் குளோரின் சப்ளை பெற வேண்டியுள்ளது. மேற்கண்ட சப்ளைக்கு 2007-08 ஆம் ஆண்டிற்கு உத்தேச மதிப்பீடு ரூ.24.80 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 6.8.2007ல் முன் ஒப்புதல் பெற்றுள்ளதற்கும் நாளிதழில் உரிய விளம்பரம் வெளியிட்டு டெண்டர் கோரப்பட்டு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் L1 டெண்டர்தாரர் M/s.ராஜாராம் & கோ (க.எண் 17 கீழமாசிவீதி மதுரை) அவர்கள் மதிப்பீட்டு விலைக்கு 0.20% கூடுதலாக பண்ணைப்பட்டி குடிநீர் சுத்தகரிக்கும் நிலையத்திற்கு 1 மெட்ரிக் டன் ரூ.18,890/- (ரூபாய் பதினெட்டாயிரத்து எண்ணூற்றி தொண்ணூறு மட்டும்) குடிநீர் சப்ளை செய்யவும், அரசரடி குடிநீரேற்று நிலையத்திற்கு ஒரு மெட்ரிக் டன் ரூ.18,540/- (ரூபாய் பதினெட்டாயிரத்து ஐந்நூற்றி நாற்பது மட்டும்) -க்கு சப்ளை செய்ய ஒப்புக்கொண்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொண்டுள்ளதை 29.10.2007ல் வணக்கத்திற்குரிய மேயர் முன் ஒப்புதலுடன் பெற்று 10.11.2007 முதல் 9.11.2008 முடிய ஓராண்டு காலத்திற்கு மொத்தம் 132 மெட்ரிக் டன் குளோரின் சப்ளை செய்ய உத்தரவு வழங்கியுள்ளதை மாமன்றத்தின் பின்னேற்பு கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண். 388**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 5) மபொ7 / மஎண் 1422 / 06

மதுரை மாநகராட்சி வார்டு 29 எல்லீஸ் நகர் பகுதியில் உள்ள பாதாளச்சாக்கடை பைப் லைனில் மண் அகற்றுதல், அனைத்து மேன்ஹோல்களில் தேங்கியுள்ள மண்களை அகற்றுதல், கழிவுநீர் சேகரிப்பு பெரிய கிணறுகளில் மண் அகற்றுதல் சேதாரம் அடைந்த கழிவுநீர் பைப்களை அகற்றி புதிய பைப் அமைத்தல் புதிய மேன்ஹோல்களை உயர்த்தி கட்டுதல் மற்றும் கழிவு நீர் சேகரிப்பு கிணறுகளை பலப்படுத்தி கட்டுதல் ஆகிய வேலைகளுக்கு 2006-2007ஆம் ஆண்டு விலை விகிதப்படி ரூ.16,75,000/- (ரூபாய் பதினாறு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு 15.3.2007 ஆம் தேதிய மாமன்றம் தீர்மானம் எண் 376ல் ஒப்புதல் பெறப்பட்டு டெண்டர் வரவழைக்கப்பட்டதில் இரண்டு சீலிட்ட டெண்டர்கள் பெறப்பட்டு அதில் திரு. P.சௌந்திரபாண்டியன் 9, அஹிம்சாபுரம் ஐந்தாவது தெரு, செல்லூர், மதுரை 2. என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலைக்கு 0.73% குறைவாக கொடுக்கப்பட்ட டெண்டரை ஏற்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்ட வேலை உத்தரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண். 389**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 6) மபொ 6 / மஎண் 309 / 05-06

மதுரை மாநகராட்சி தெற்குமண்டலம் வார்டு எண்.**42–**ல் எம்.கே.புரம் காஜா தெரு வாஞ்சிநாதன் தெருக்களில் சாலை அமைக்கும் வேலைக்கு **2005–2006** ஆண்டு விலை விகதத்திற்கு ரூ.16,00,000/-க்கு (பதினாறு இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மேற்கண்ட மதிப்பீடு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று டெண்டர் வரவழைக்கப்பட்டதில் மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு **1.04**% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எ.கே.ராமமூர்த்தி, என்பவரின் டெண்டரை ஏற்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை துவங்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பெறப்பட்டுள்ள வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதலுக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண். 390**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 7) ம.ந.2 / 36359 / 07

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணி செய்யும் பொருட்டு, காலியாக உள்ள துப்புரவு ஊழியர் பணியிடத்தில் ஏற்கனவே தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் பணியிடங்கள் நீங்கலாக 25 விழுக்காடு அடிப்படையில் வடக்கு மண்டலத்திற்கு 25–ம் மேற்குமண்டலத்திற்கு 15–ம், தெற்குமண்டலத்திற்கு 25–ம், கிழக்கு மண்டலத்திற்கு 23–ம் ஆக மொத்தம் 88 தினக்கூலிகள் திருவிழாக்காலங்களில், தினக்கூலி ஊழியர்களை தேர்வு செய்வது போல் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அட்டையுடன் அடிப்படையில் தற்காலிக தினக்கூலி ஊழியர்களை தேர்வு செய்து 01.11.2007 முதல் 28.01.2008 முடிய 89 நாட்கள் பணி செய்தமைக்கும், அதற்கான சம்பளத்தொகை ரூ.7,20,544/-ஐ வழங்கியதற்கும் மீண்டும் 30.1.2008 முதல் 27.4.2008 வரை பணி நீட்டிப்பு செய்ய அனுமதித்து பணி செய்தமைக்கும் அதற்குரிய சம்பளம் வழங்கவும் மேலும் 29.4.2008 முதல் 26.7.08 வரை 89 நாட்களுக்கு மீண்டும் பணி செய்வதற்கு அனுமதித்தும் மேலும் இனிவரும் காலங்களில் ஒவ்வொரு 89 நாட்களுக்கும் பணி உத்தரவு வழங்கி அதற்கான சம்பளம் அந்தந்த மண்டலங்களிலேயே வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண். 391**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 8) ம.தி .1/ 14254 / 08

மதுரை மாநகராட்சி மாடக்குளம் கிராமம் R.S.No.11/5 (P)ல் கட்டுப்பட்ட பொது உபயோக நிலத்தை குடியிருப்பு நில உபயோகமாக மாற்றி தரும்படி திரு.எம்.ரமேஷ் என்பவரின் 30.04.2008ந் தேதிய மனு பரிசீலிக்கப்பட்டு, மேற்படி இடம் அங்கீகரிக்கப்பட்ட புது எல்லீஸ் நகர் விரிவு அபிவிருத்தி திட்டத்தில் அமைகிறது. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினரால் பொது உபயோகத்திற்காக அறிவிக்கப்பட்டு மனுதாரருக்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது. மேற்படி மனை 12 பிளாட்களாக பிரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மனைக்கு நான்கு புறமும் அணுகு சாலைகள் உள்ளன. எனவே மனை உபயோக மாற்றம் மற்றும் மனைபிரிவிற்கு உரிய உத்தரவு வழங்க மனுதாரரின் விண்ணப்பத்தினை மதுரை உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு அனுப்பி வைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண். 392**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 9) ம.பொ .4/ 00644 / 08

மதுரை மாநகராட்சி வார்டு 11ல் டாக்டர். தங்கராஜ் சாலையில் உள்ள நீச்சல் குளத்தின் அருகில் உள்ள சிறுவர் பூங்கா ( Lawn with Children's Park) மற்றும் சிற்றுண்டிச்சாலை அமைத்து நீச்சல்குளம், உடற்பயிற்சி கூடத்தில் ISO தரப்பிற்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி நீச்சல் குளத்தினை சொந்த செலவில் ISO Standard-ன்படி மாநகராட்சி தெரிவிக்கும் விபரக்குறிப்புகள் (Technical Specification) அடிப்படையில் மேம்படுத்தவும் பராமரிக்கவும் மேற்கண்ட திட்டத்தை மேம்படுத்தவும் பராமரிப்பதற்கும் ஆகும் செலவிற்கு சிற்றுண்டிச்சாலை மற்றும் சிறுவர் பூங்கா அமைத்து குறிப்பிட்ட காலத்திற்கு பின்பு எந்தவித நிபந்தனை இல்லாமலும் உரிமை கோராமலும் மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற நிபந்தனை அடிப்படையில் பராமரிக்க விருப்பமுள்ள நிறுவனங்களிடமிருந்து விருப்பத்தை தெரிவிக்கும் கடிதம் (Letter of Interest) கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று நிறுவனங்களில் அதிக மதிப்பெண் பெற்ற M/s.FOUNDATION OF OCCUPATION DEVELOPMENT மற்றும் M/s. DEVASHRAM நிறுவனங்களுக்கு Price Bid படிவம் அலுவலகத்தில் சமர்ப்பிக்க கடிதம் அனுப்பப்பட்டது. மேற்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற Price Bid ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு விலைப்புள்ளி ஒப்பிட்டு பட்டியல் தயார் செய்வதில் அதிக புள்ளிகள் கொடுத்துள்ள L1 டெண்டர்தாரர் M/s. FOUNDATION OF OCCUPATION DEVELOPMENT நிறுவனம் மாநகராட்சிக்கு மாதம் ரூ.10,000/- செலுத்துவதாக தெரிவித்துள்ளார். அன்னாரின் விலைப்புள்ளி விகிதத்தை மதிப்பாய்வுக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் மதிப்பாய்வுக்குழு ஏற்பு செய்து தீர்மானிக்கப்பட்டது. மேற்கண்ட மதிப்பாய்வுக்குழுவில் ஏற்பு செய்ததை ஏற்று M/s. FOUNDATION OF OCCUPATION DEVELOPMENT, BATATHYAR COMPLEX, 100 FEET ROAD, CHENNAI நிறுவனத்திற்கு அனுமதி உத்தரவு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண். 393**
**அனைத்து கட்சி மாமன்ற உறுப்பினர்களும் கருத்திற்கிணங்க இந்த பொருள் கைவிடப்பட்டது.**

**<u>10) மநி 5/ 03014/ 08</u>**

தமிழக அரசின் சார்பாக மதுரை மாநகராட்சியின் தமுக்கம் மைதானம் மற்றும் கலையரங்கத்தில் ஆண்டுத்தோறும் அரசு சித்திரை பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி இவ்வாண்டும் அதே பொருட்காட்சி நடத்திட தமுக்கம் மைதானம் மற்றும் கலையரங்கத்தினை 25.03.2008 முதல் 20.6.2008 வரை ஒதுக்கீடு செய்து தருமாறு இயக்குநர் தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அவர்களின் நேர்முக கடிதம் எண்.1260/பொ.கா 2008 நாள் :22.01.2008ல் கேட்டுக்கொள்ளப்பட்டது. மதுரை மாநகராட்சியின் தமுக்கம் கலையரங்கம் மற்றும் மைதானத்தில் அரசு சித்திரை பொருட்காட்சியை நடத்துவதன் மூலம் கிடைக்கப்பெறும் மொத்த நிகர லாபத்தொகையில் 50% லாப பங்குத்தொகையை இம்மாநகராட்சிக்கு வழங்கப்பட வேண்டுமென்ற வழக்கமான நிபந்தனைக்குட்பட்டும் அரசு பொருட்காட்சி 2008 ஐ தமுக்கம் கலையரங்கம் மற்றும் மைதானத்தில் நடத்திக்கொள்ள இயக்குநர் தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அவர்களுக்கு 25.3.2008 முதல் 25.6.2008 தேதி முடிய தமுக்கம் கலையரங்கம் மற்றும் மைதானத்தை ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கியதை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

<u>**மாமன்ற தீர்மானம் எண். 394**</u>
<u>**பதிவு செய்யப்பட்டது.**</u>

(ஒம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

**மதுரை**
**நாள் : 21.5.2008**

* * * * * * *

**"கண்ணைக் காப்பது இமை"**
**"மண்ணைக் காப்பது மழை"**

மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2008**ம் ஆண்டு **மே** திங்கள் **28-ம்** நாள் **புதன்கிழமை** காலை **12.30** மணிக்கு

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**1) சி.டபிள்யு.3 / 0883 / 2007**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-1 விதி 19(2)ன் படி 22.5.2008ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்றதீர்மானம் எண் .395**
**பதிவு செய்யப்பட்டது.**

**2) ம.நி.1 / 00563 /2008**

மதுரை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகளில் அனுமதிக்கப்பட்டிருந்த பதவி உயர்வு பணியிடங்களில் எண்ணிக்கையில் மிகக் குறைந்த அளவே இருந்ததால் கீழ்நிலையில் பணிபுரிந்த தகுதிவாய்ந்த பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதில் ஏற்படும் சிரமத்தை தவிர்க்கும் பொருட்டு, மதுரை மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட 27 உதவிப் பொறியாளர் பணியிடங்களில் 6 பணியிடங்களை தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களாக தற்காலிகமாக இறக்கம் (Down Grade) செய்தும், இப்பணியிடங்களில் பொறியியல் பட்டயம் (DCE) பெற்ற வேலை ஆய்வாளர்களை 5 ஆண்டுகளுக்குள் அன்னார்கள் பொறியியல் பட்டம் (B.E.) பெற வேண்டும் என நிபந்தனை விதித்து பதவி உயர்வு செய்ய அரசின் அனுமதி கோரப்பட்டது. அதன் அடிப்படையில் அரசாணை (நிலை) எண். 41, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 29.3.2000ல் 6 (ஆறு) தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களாக தற்காலிகமாக இறக்கம் செய்து ஆணையிடப்பட்டது. மேலும் இப்பணியிடங்களை மீண்டும் உதவிப் பொறியாளர் பணியிடங்களாக உயர்த்த (Up grade) உரிய காலத்தில் செயற்குறிப்பு அனுமதி வைக்கப்பட்டிருந்தது.

மேற்படி அரசாணையின்படி திரு.ஆர். முருகன் உட்பட 5 வேலை ஆய்வாளர்கள் தொழில்நுட்ப உதவியாளர்களாக பணி உயர்வு செய்யப்பட்டு, 5 ஆண்டு காலத்திற்குள் பொறியியல் பட்டம் பெற வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டது. இதன் அடிப்படையிலேயே திரு.எஸ். அரசு மற்றும் திரு.பி. சுப்பிரமணியன் ஆகியோர் பொறியியல் பட்டப்படிப்பு முடித்து நிபந்தனையினை பூர்த்தி செய்து உதவிப் பொறியாளர்களாக பணி உயர்வு செய்யப்பட்டனர்.

தற்போது திரு.ஆர்.முருகன், இளநிலை பொறியாளராக பணிஉயர்வு பெற்றும், கடந்த நவம்பர் 2007ல் பொறியியல் பட்டப்படிப்பில் தேர்ச்சியும் பெற்றுள்ளார். அன்னாரின் பொறியியல் பட்டப் படிப்பிற்கான சேர்க்கை நிகழ்வுகளை கருத்திற்கொண்டும், இவ்வலுவலக 17.4.2003ந் தேதிய குறிப்பாணையின்படி பி.இ. பட்டப்படிப்பு பயில அனுமதிக்கப்பட்ட 5 ஆண்டுகளுக்குள் பொறியியல் பட்டப்படிப்பு முடித்து தேர்ச்சி பெற்றுள்ளதை கருத்திற்கொண்டு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு திரு.ஆர்.முருகன் இளநிலை பொறியாளரை வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று உதவி பொறியாளராக பணி உயர்வு செய்தமைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றதீர்மானம் எண் .396**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**3) ம.பொ.5 /18366 /08**

மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்.**56**, கீழ்மதுரை ஸ்டேசன் சாலை மார்க்கெட் அருகில் சுமார் **4500** சதுர மீட்டர் அளவில் D.B.O.T. திட்டத்தில், கல்யாண மகால் (மணமகன் அறை, மணமகள் அறை உட்பட), சமையல் கூடம், உணவுகூடம், கழிப்பறை, அலுவலகம், கார் மற்றும் இரண்டு சக்கர வாகனங்கள், நிறுத்துமிடம் மற்றும் தேவையான அனைத்து வசதிகளுடன் கூடிய வரைபடம் தெளிவான திட்ட அறிக்கை தயார் செய்து கொடுக்க தகுதியுள்ள நிறுவனத்தினரிடம் விருப்ப கடிதம் கோர அனுமதி கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றதீர்மானம் எண் .397**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4) ம.பொ. /15870/08**

மதுரை மாநகராட்சி லாரி நிலையத்தில் பல ஆண்டுகளாக உபயோகமற்ற நிலையில் கீழ்கண்ட வாகனங்கள் உள்ளன. அவற்றை பட்டியலிட்டு அதற்குரிய துறைகளிடமிருந்து மதிப்பீடுகள் பெற்று விற்பனை நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

**(1) அரசு மூலம் மதிப்பீடு பெறப்பட வேண்டிய வாகனங்கள்**

| SL.No | REGN.NO | MAKE |
|---|---|---|
| 1 | JCB 4161 | Ashok.Leyland |
| 2 | MDU 9679 | B. Ford |
| 3 | MDA 201 | Fargo |
| 4 | MDA 891 | Benz |
| 5 | TNA 3961 | Ashok.Leyland |
| 6 | TNA 4131 | A.L |
| 7 | TAU 6516 | A.L |
| 8 | AN 59 A 1420 | A.L |
| 9 | TN 59 G 0187 | A.L |
| 10 | TN 59 G 0188 | A.L |
| 11 | TN 59 G 0189 | A.L |
| 12 | TN 59 8543 | A.L |
| 13 | 31298 | Escort/JCP/Back hoe loader/ 1990-92 make |
| 14 | 31318 | Escort/JCP/Back hoe loader/ 1990-92 make |
| 15 | 31324 | Escort/JCP/Back hoe loader/ 1990-92 make |
| 16 | 32968 | Escort/JCP/Back hoe loader/ 1990-92 make |
| 17 | 36353 | Escort/JCP/Back hoe loader/ 1990-92 make |

ஆகமொத்தம் **17** வாகனங்களை கழிதல் செய்து உரிய மதிப்பீடுகள் மேற்படி துறைகளிடமிருந்து பெறப்பட பின்பு மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று விற்பனை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றதீர்மானம் எண் .398**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**5) ம.பொ.2/15872/08**

மதுரை மாநகராட்சி லாரி நிலையத்தில் பல ஆண்டுகளாக உபயோகமற்ற நிலையில், வாகனங்களின் உதிரி பாகங்கள் உள்ளன. இந்த மாதிரி வாகனங்களை ஏலம் அல்லது டெண்டர் மூலம் விற்பனை செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

| Sl.No. | Ref. No. | Description | Present condition | Remarks |
|---|---|---|---|---|
| 1 | TN 59U 7666<br>TN 59 0005<br>TN 59 1234 | அம்பாசிடர் பெட்ரோல் எஞ்சின்<br>3 Nos Old Ambassador petrol engine | As dismantled stage | |
| 2 | 1 No. | குடிநீர் டிரெய்லர்<br>Trailer – Steel water tank mounted | Condemned | |
| 3 | 1 No. | குடிநீர் டாங்க் மட்டும்<br>Tank only (Cylinder) | Condemned | |
| 4 | 6 Nos. | டம்பர் பின்<br>3m.m single steels dumper bins | Condemned | |
| 5 | 1 No. | தார் பாய்லர்<br>Tar boiler tank | Condemned | |
| 6 | 1 No. | லாரி பின்புறபாடி<br>Rear body (open) | Condemned | |
| 7 | 300 kg | வாகனங்களில் கழட்டப்பட்ட உதிரி பாகனங்கள்<br>Detached old parts of vehicles during service replacement | Scraps | |

**மாமன்றதீர்மானம் எண் .399**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**6) ம.தி.1/ 12392 /08**

மதுரை மாநகராட்சி, சர்வே வார்டு எண். 10, பிளாக் எண்.115, TS.No.15, பாலம் ஸ்டேசன் ரோடில் கட்டுப்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தை 33/1KV செல்லூர் துணை மின் நிலையம் அமைக்க வழங்க கோரிய – நிர்வாக பொறியாளர் விநியோகம் வடக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் Lr.No.EE/D/N/Metro/Mdu/TA/F. Sellur. SS/D.No.717/08, நாள் : 4.4.2008ந் தேதிய கடிதம் வாசிக்கப்பட்டு, மேற்படி சர்வே வார்டு 10 பிளாக் எண்.115, T.S.No.15-ல் கட்டுப்பட்ட இடம் மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடமாகும் அரசின் ஒப்புதலை பெற்று மேற்படி இடத்தில் 15 சென்ட் இடத்தை செல்லூர் துணை மின் நிலையம் அமைக்க அரசின் ஒப்புதல் பெற்று தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உரிய நிலக்கிரையம் பெற்று வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றதீர்மானம் எண் .400**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7) ம.வ.3/ 13734 /08**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் நிறுவப்பட்டுள்ள மின் விளக்கு கம்பங்கள் மற்றும் மதுரை மாநகரின் போக்குவரத்து மேம்பாட்டிற்காகவும்,

போக்குவரத்தினை சீர்படுத்துவதற்காகவும் பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு கண்காணிப்பு கோபுரங்கள் மற்றும் ஒலிபெருக்கி கம்பங்களில் அலங்கார விளக்குகளுடன் கூடிய விளம்பரங்கள் அமைத்துக் கொள்ள அனுமதி வழங்குவதற்கு வருடம் ஒன்றுக்கு ஒரு சதுர அடிக்கு கட்டணம் ரூ.500/– வசூலிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றதீர்மானம் எண் .401**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8) Ma.Po.6 / 206 /07-08**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளை செப்பனிட 'TNUDF'நிதியுதவியின் கீழ் செய்து கொள்ள உரிய ஒப்புதல் பெறப்பட்டது. இவற்றில் கீழ்கண்ட ஏழு பணிகள் மட்டும் மேற்படி நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்படாததால்,

மாநகராட்சி பொது நிதியின் கீழ் செய்து கொள்ள வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | வார்டு எண் | மதிப்பீட்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட கூடுதல் / குறைப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 32 | ம.பொ.6/மஎ206/07-08 | டவுன்உறால் சாலை மற்றும் சுற்றுப்புறச் சாலைகள் மராமத்து செய்தல் | 23.25 | M/S.யோகா அன் கோ | 2007 – 08 ஆண்டின் விலை விகிதம். |
| 2. | 4 | ம.பொ.4/மஎ340/07-08 | அழகர் நகர் 4 முதல் 7 தெருக்களில் தார் சாலை மராமத்து செய்தல். | 24.99 | M/S.யோகா அன் கோ | 2007 – 08 ஆண்டின் விலை விகிதம். |
| 3. | 38 | ம.பொ.6/மஎ342/07-08 | வெங்கலக்கடைத் தெரு மற்றும் ஜடாமுனி கோவில் தெருக்கள் சிறப்பு மராமத்து செய்தல் | 20.50 | M/S.யோகா அன் கோ | 2007 – 08 ஆண்டின் விலை விகிதம். |
| 4. | 38 | ம.பொ.6/மஎ343/07-08 | கான்சா மேட்டுத் தெரு மற்றும் கீழ ஆவணி மூல வீதியில் தார் சாலை சிறப்பு மராமத்து செய்தல் | 12.50 | M/S.யோகா அன் கோ | 2007 – 08 ஆண்டின் விலை விகிதம். |
| 5. | 2 | ம.பொ.3/மஎ402/07-08 | காமராஜ் 1வது தெரு 1வது குறுக்கு தெரு, இராமமூர்த்தி தெரு, முத்துராமலிங்க தேவர் தெரு, மற்றும் இராஜாஜி தெருவில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல். | 24.00 | M/S.யோகா அன் கோ | 2007 – 08 ஆண்டின் விலை விகிதம். |
| 6. | 1 | ம.பொ.3/மஎ345/07-08 | பாரதியார் தெரு, இந்திரா நகர் மெயின் 2,3,4 தெருக்களில் தார் சாலை அமைத்தல். | 24.90 | M/S.MAK Construction | 4.93% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட அதிகம். |
| 7. | 72 | ம.பொ.7/மஎ366/07-08 | ஜெயின் நகர் 1வது தெரு குறுக்கு தெருக்கள் அசோக் நகர் 3வது தெரு மற்றும் குறுக்கு தெருக்களில் தார் சாலை அமைத்தல், | 24.98 | திரு.M.கண்ண ன் | 0.41% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு. |

**மேற்கண்ட பணிகளுக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.**

**மாமன்றதீர்மானம் எண் .402**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**9) JNS 4/ 17684/2008**

மதுரை மாநகராட்சி ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் **மழைநீர் வடிகால் திட்டத்திற்கு** மெசர்ஸ். வி.டி.பி & கார்வின்ஸ் (JV), பெங்களூர் நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்தார் கான்கிரீட் கலவை தயாரிக்கும் இயந்திரம் அமைப்பதற்கு மூன்று இடங்கள் மாநகராட்சியில் கொடுக்கும்படி கேட்டுள்ளார்கள். இதன் முதற்கட்டமாக கோச்சடையில் உள்ள காலி இடத்தை தங்களுக்கு கொடுக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான கோச்சடை நீரேற்று நிலையத்தில் RS No. 19ல் 7.76 ஏக்கர் காலியிடம் உள்ளது. இவ்விடத்தில் கான்கிரீட் கலவை தயாரிக்கும் இயந்திரம் அமைப்பதற்கு 0.87 ஏக்கர் ( 3510 ச. மீ) வழங்கவும், இந்த இடத்திற்கு ச. மீ க்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 2/- வீதம் குத்தகை அடிப்படையில் நிர்ணயம் செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றதீர்மானம் எண் .403**

**சதுர மீட்டருக்கு ரூ.2/-லிருந்து ரூ.5/- ஆக உயர்வு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10) மநி 1 /18107/06**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புதுப்பித்தல் திட்டத்தின்கீழ், அரசாணை எண்.105 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 26/6/2007-ன்படி மதுரை மாநகராட்சியில் புதிதாக இரண்டாண்டுகளுக்கு மட்டும் தோற்றுவிக்கப்பட்ட கண்காணிப்பு பொறியாளர் பணியிடத்தில் இதுவரை அயற்பணியின்கீழ் தகுதியான அலுவலர் எவரும் நிரப்பப்படாததால் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டப் பணிகளில் முன்னேற்றம் எய்தவும், மதிப்பீட்டு பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கவும் மேற்படி பணியிடத்தினை நிரப்ப வேண்டிய அவசர அவசியங்களைக் கருத்திற்கொண்டு இம்மாநகராட்சியில் பணிபுரியும் செயற்பொறியாளர்களில் பணியில் மூத்தவரான திரு. வி. மோகன்தாஸ், நிர்வாகப் பொறியாளரை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் கண்காணிப்பு பொறியாளராக பணி உயர்வு செய்ய அரசுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றதீர்மானம் எண் .404**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11) ந.பொ. 1 / 01595 / 06**

**மதுரை மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட கீழே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் கூடுதலாக கழிப்பறைகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.**

| வ.எண். | வார்டு எண். | கழிப்பறை கட்ட வேண்டிய இடங்கள் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| **வடக்கு மண்டலம்** | | | |
| 1 | 2 | நேதாஜி மெயின்ரோடு | 4.00 |
| 2 | 11 | தல்லாகுளம் கமலா தெரு கிழக்கு கடைசி (யூனியன் கிளப் பின்புறம்) | 4.00 |
| **கிழக்கு மண்டலம்** | | | |
| 3 | 56 | காமராஜபுரம் வடக்கு தெரு மார்கெட் பின்புறம் - கழிப்பறை எண். I | 4.00 |
| 4 | 56 | காமராஜபுரம் வடக்கு தெரு மார்கெட் பின்புறம் - கழிப்பறை எண். II | 4.00 |
| 5 | 56 | காமராஜபுரம் வடக்கு தெரு மார்கெட் பின்புறம் - கழிப்பறை எண். III | 4.00 |
| 6 | 58 | புது நல்லமுத்துப்பிள்ளை சாலை - கழிப்பறை எண். I | 4.00 |
| 7 | 58 | புது நல்லமுத்துப்பிள்ளை சாலை - கழிப்பறை எண். II | 4.00 |
| **மேற்கு மண்டலம்** | | | |
| 8 | 25 | ஆரப்பாளையம் மெயின் சாலை மேல்நிலைத்தொட்டி அருகில் | 4.00 |
| 9 | 30 | காட்டு நாயக்கர் தெரு, வைத்தியநாதபுரம் | 4.00 |
| 10 | 68 | பழங்காநத்தம் உழவர் சந்தை | 4.00 |
| 11 | 69 | பொன்மேனி மெயின் சாலை | 4.00 |
| | | **மொத்தம்** | **44.00** |

ஷ இடங்களில் கழிப்பறைகள் ஒவ்வொன்றும் ரூ. 4.00 இலட்ச மதிப்பீட்டின் படி 11 இடங்களில் ரூ. 44.00 இலட்ச மதிப்பீட்டில் நவீன கழிப்பறைகள் கட்டுவதற்கும், ஷ கழிப்பறைகளை 'வாம்பே' சுகாதார திட்டத்தின் கீழ் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவு வழங்கும் படி நகராட்சி நிர்வாக ஆணையரிடம் கோருவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றதீர்மானம் எண் .405**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**12) ம.பொ.4/ 17327 / 08**

மதுரை மாநகராட்சி, வடக்கு மண்டலம் வார்டு எண்.8, அண்ணாநகரில் அமைந்துள்ள அன்னை வேளாங்கன்னி சர்ச் கோவில் சுமார் 25 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகவும், இச்சர்ச்சிற்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் சுவாமி தரிசனம் செய்வதால், இவர்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக இலவச குடிநீர் இணைப்பு வேண்டி அண்ணாநகர் வேளாங்கன்னி திருத்தல் பங்குத் தந்தையும், 8வது வார்டு மாமன்ற உறுப்பினரும் கோரியுள்ள மனுவின்பேரில், அன்னை வேளாங்கன்னி ஆலயத்திற்கு மாநகராட்சியிலிருந்து ½ ” அளவு கருவியுடன் இலவச குடிநீர் இணைப்பு அமைக்க அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்பதலுக்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றதீர்மானம் எண் .406**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்.) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 26.5.2008**

* * * * * * * * *

**மதுரை மாநகராட்சி**

**மாமன்றக்கூட்டம் நாள் : 28.5.2008**

# Out of Agenda

## 1) JNS 4/ 1771/2008

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணாமாளிகையில் அமைந்துள்ள மாநகராட்சி மைய அலுவலகத்தின் மூன்றாம் தளத்தில் JnNURM பிரிவு அலுவலகம் அமைத்து அதிலுள்ள பழைய சிமெண்ட் தளங்களை உடைத்து விட்டு புதிதாக மார்போனைட் சிலாப் பதிக்கவும் அலுமினியம் ஜன்னல்கள் மற்றும் கதவுகள் அமைப்பதற்கும், Fபால்ஸ் சீலிங் வசதிகள் செய்வதற்கும் கழிப்பறை கோப்பைகள் மற்றும் வால் டைல்ஸ் வசதிகள் செய்வதற்கும் உத்தேசித்து அதற்கான மதீப்பீடு தொகை ரூ. 24,99,000 /- (ரூபாய் இருபத்தி நான்கு இலட்சத்தி தொண்ணூாத்திற்றி ஓன்பது) க்கு தயாரிக்கப்பட்டு 23/01/08 ம் தேதியன்று வ.உ..மேயர் அவர்களது முன்ஒப்புதல் பெற்று 11/03/08 ல் டெண்டர் வரவழைக்கப்பட்டது. மேற்கண்ட தேதியில் கீழ்க்கண்ட நிறுவனத்தார்களிடமிருந்து வரப்பெற்று திறக்கப்பட்டது. அதில் கீழ்கானும் விலை விகிதம் கொடுத்துள்ளனா்.

| வ.எண் | நிறுவனத்தார் பெயர் | டெண்டர் தொகை (ரூபாய்) | விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s. Yogaa & Co<br>1/354-2,Ramasamynagar, Thirumalpuram, Madurai - 16 | 19,73,532 | (+) 7.02% மதிப்பீட்டு விலைக்கும் அதிகம் |
| 2 | Er. J.F. Javid Hussain BE.<br>Civil Engineer & Contractor<br>206A,South Marret Street, South Gate, Madurai - 1 | 20,37,627 | (+) 10.49% மதிப்பீட்டு விலைக்கும் அதிகம் |

இதில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள டெண்டர்தாராட் M/s. Yogaa & Co மதீப்பீடு விலைக்கு கூடுதலாக கொடுத்ததால் மதீப்பாய்வு குழுவின் முடிவின்படி விலைக்குறைப்பு செய்து தர கூறப்பட்டது. அதன்படி அன்னார் கொடுத்துள்ள விலையான 7.02% விகிதத்தை 4.99% ஆக விலை குறைப்பு செய்து மேற்கண்ட நிறுவனத்தாரால் கொடுக்கப்பட்ட 31,3,08 ஆம் தேதிய சம்மத கடிதத்தின்படி அன்னாருக்கு வேலை உத்தரவு வழங்கலாம் என்ற மதிப்பாய்வு குழுவின் முடிவினை மாமன்றத்தின் முன்வைத்து ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றதீர்மானம் எண் .407**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 2) JnS6/18364/08

ஜவஉறா்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத்திட்டத்தின் கீழ் குப்பைகள் அகற்றும் பணிக்கு வாகனங்கள் வாங்கப்பட்டு வருகிறது. அதற்கு தேவையான ஓட்டுனர்கள் தமிழ் நாடு முன்னாள் படை வீரர்கள் நலச்சங்கம் நிறுவனத்திடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் பெறலாம். இத்திட்டத்திற்கு பெறப்படும் வாகனங்களின் விபரம்

| | |
|---|---|
| டிப்பர் லாரி | - 4 |
| காம்பாக்டர் | - 4 |
| மினி லோடர் | - 4 |
| மண் அகற்றும் இயந்திரம் | - 4 |
| டம்பர் பிளேசர் | - 47 |
| **மொத்தம்** | 63 **வாகனங்கள்** |

தமிழ்நாடு முன்னாள் படை வீரர்கள் கார்பரேசன் லிட். (Texco) அவர்களின் 16.05.2008ம் தேதிய கடிதத்தில் ஓட்டுனருக்கு மாதம் ஒன்றுக்கு (8 மணி நேரம்) ரூ. 8552/- எனத் தெரிவித்து உள்ளனர். ஜவஉறா்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் வாகனங்களின் பராமரிப்பு அவசியத்தை கருதி மேற்கண்ட ஊதிய அடிப்படையில் 63 ஓட்டுனர்களை தமிழ்நாடு முன்னாள் படை வீரர்கள் கார்பரேசன் லிட். (Texco) அவர்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் பெறுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றதீர்மானம் எண் .408**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

3) **B 30/ 02095 / 08**

மதுரை மாநகராட்சி லாரி நிறுத்துமிடத்தில் குப்பை அள்ளும் பணி மற்றும் கட்டிட இடிபாடுகள் அள்ளுவதற்கும் தேவையான வாகன ஓட்டுனர்கள் ஒப்பந்த அடிப்படையில் நிபந்தனைக்குட்பட்டு சப்ளை பெறப்பட்டு சப்ளை காலம் முடிவடையும் நிலையில் உள்ளது.

மேற்கண்ட வாகன ஓட்டுனர்களை ஒப்பந்தகாரர்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் சப்ளை பெறுவதற்கு பதில் தமிழ்நாடு முன்னாள் இராணுவத்தினர் கார்ப்பரேசன் லிமிடெட் (டெக்ஸ்கோ) அவர்களிடம் சப்ளை பெறலாம் என்பதற்கு மேற்கண்ட நிறுவனத்திடம் ஊதியம் விபரம் கோரப்பட்டதில் கீழ்க்காணும் ஊதிய விபரம் 16.05.2008 கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர்.

| வ.எண். | விபரம் | | விலை விகதம் (8 மணி நேரம் / ஒரு நாள்) |
|---|---|---|---|
| 1. | ஓட்டுனர் | | ரூ. 6796.00 |
| 2. | சர்வீஸ் சார்ஜ் @ 12% | | ரூ. 815.52 |
| | | மொத்தம் | ரூ. 7611.52 |
| 3. | சர்வீஸ் டாக்ஸ் @ 12.36 | | ரூ. 940.78 |
| | | மொத்தம் | ரூ. 8552.30 |
| | | Off. (-) | ரூ. 0.30 |
| | மொத்தம் | | ரூ. 8552.00 |

தமிழ்நாடு முன்னாள் இராணுவத்தின் கார்ப்பரேசன் லிமிடெட் (டெக்ஸ்கோ) நிறுவனத்தாரின் ஊதியத்தினை ஏற்று முதலில் 52 ஓட்டுனர்கள் சப்ளை பெறலாம் என்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றதீர்மானம் எண் .409**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

4) **ந.பொ.1/ 01595 / 06**

மதுரை மாநகராட்சியின் தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் கீழே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் கூடுதலாக கழிப்பறைகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண். | கழிப்பறை கட்ட வேண்டிய இடங்கள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 42 | சுப்பிரமணியபுரம் 1வது தெரு | 4.00 |
| 2 | 42 | சுப்பிரமணியபுரம் 2வது தெரு (ஆண்கள் கழிப்பறை) | 4.00 |
| 3 | 42 | சுப்பிரமணியபுரம் 2வது தெரு (பெண்கள் கழிப்பறை) | 4.00 |
| 4 | 42 | சுப்பிரமணியபுரம் செட்டியார் தெரு | 4.00 |
| 5 | 41 | இரத்தினாபுரம் | 4.00 |
| 6 | 64 | கோவலன்நகர் | 4.00 |
| 7 | 65 | முத்துப்பட்டி | 4.00 |
| | | **மொத்தம்** | **28.00** |

ஷை இடங்களில் கழிப்பறைகள் ஒவ்வொன்றும் ரூ.**4.00** இலட்ச மதிப்பீட்டின்படி **7** இடங்களில் ரூ.**28.00** இலட்ச மதிப்பீட்டில் நவீன கழிப்பறைகள் கட்டுவதற்கும், ஷை கழிப்பறைகளை 'வாம்பே' சுகாதார திட்டத்தின்கீழ் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவு வழங்கும்படி நகராட்சி நிர்வாக ஆணையரிடம் கோருவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றதீர்மானம் எண் .410**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

5) **கி.ம.பொ.1/ 003349 / 08**

மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்.**44**ல் உள்ள சிங்கார தோப்பு பகுதியில் உள்ள பிள்ளையார் கோவிலுக்கு இலவச பொது குழாய் அமைக்க மாமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்படி கோவில் பொது மக்கள் பயன்பாட்டுக்கான வழிபாட்டு தளமாக உள்ளதாலும், மாநகராட்சி சட்ட விதி **13**(A) B கோவில், மசூதிகள் மற்றும் கிருஸ்துவ ஆலயங்களுக்கு இலவச இணைப்பு ½" அளவு கருவியுடன் குடிநீர் குழாய் வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றதீர்மானம் எண் .411**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**மதுரை** **(ஒம்..) ஜி.தேன்மொழி**
**மேயர்**
**நாள் : 26.5.2008** **மதுரை மாநகராட்சி**